மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.31/2017

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தசரதன் (Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.19.08.2024</u>

<u>பி.வா.சா.1</u>

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

எனக்கு சொந்த ஊர் தங்கச்சிமடம். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். இராமநாதபுரத்தில் குமரன் சேதுபதியை பல வருடங்களாக தெரியவரும் என்றால் திருமண காலத்திலேயே இருந்து எனக்கு தெரியும். 30 வருட காலத்திற்கு மேலாக அவரை தெரியும் என்றால் நியாபகம் இல்லை. அவரது பல வழக்குகளில் நான் அதிகார முகவராக இருந்துள்ளேன் என்றால் இல்லை. அவரது அதிகார முகவராக இருந்து பல சொத்துக்களை விற்பனை செய்துள்ளேன் என்றால் அவருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு இருக்கும் சமயங்களில் மருத்துவ செலவிற்காகவும், ஏழைகளுக்கு கொடுப்பதற்காகவும் சொத்துக்களை விற்று கொடுத்துள்ளேன். இராமநாதபுரத்தின் கடைசி சேதுபதியாக இராமநாதசேதுபதி இருந்தார் என்றால் இல்லை. குமரன் சேதுபதிதான் கடைசி சேதுபதியாக இருந்தார். இராமநாத சேதுபதியின் மனைவி ராணி இந்திராதேவி நாச்சியார் என்றால் சரிதான். ராணி இந்திராதேவியின் மகள் தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரிதான். இராமநாதபுரம் சமஸ்தானத்தின் டிரஸ்டியாக இராமநாதசேதுபதி அவருக்கு பின்னால் அவரது மனைவி மற்றும் இந்த வழக்கு வாதி ஆகியோர்தான் பரம்பரையாக வருகின்றனர் என்றால் சரிதான் குமரன் சேதுபதியும் வருவார். குமரன் சேதுபதி இராமநாதபுரம் சமஸ்தானத்தின் டிரஸ்டியாக இருந்தார் என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. அவரது குடும்பத்தினரிடம் கேட்கவேண்டும். அந்த மாதிரி குமரன் சேதுபதி இராமநாதபுர சமஸ்தானத்தில் டிரஸ்டியாக இருந்தார் என்று எனது எதிர்வழக்குரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனது

எதிர்வழக்குரைக்கு வழக்கறிஞரிடம் தகவல் சொன்னது நான்தான். குமரன் சேதுபதி சொல்லவில்லை. இராமநாத சேதுபதியின் சகோதரர் நாகேந்திர சேதுபதி என்றால் சரிதான். நாகேந்திர சேதுபதியின் மகன்தான் இந்த குமரன்சேதுபதி என்றால் சரிதான். குமரன் சேதுபதி எந்த காலத்திலும் இராமநாதபுர ராஜாவாகவும் இல்லை, சமஸ்தானத்தில் டிரஸ்டியாகவும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வேஎண். 627/554 ஆகும். விஸ்தீரணம் எவ்வளவு என்றால் நியாபகம் இல்லை. பட்டா எண் எனக்கு நியாபகம் இல்லை. இன்றைய தேதியில் இராமநாதபுர சமஸ்தான சத்திரத்தில் டிரஸ்டியாக வாதிதான் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலம் பாரா 10ல் சர்வேஎண்.627/554 ஆதியில் இராமநாத சேதுபதிக்கும், அவரது சகோதரர் நாகேந்திர சேதுபதிக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளதில், அதற்கு ஆதரமாக பட்டா ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த சொத்தை மேற்படி இருவரும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் அதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும் இந்திராதேவி நாச்சியார் மற்றும் நாகேந்திர சேதுபதி மகன் குமரன் சேதுபதி பெயரிலும் கூட்டாக வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் அது எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. ராணி இந்திராதேவி நாச்சியார் 1998ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது நிருபண வாக்குமூலம் பாரா 11ல் இந்திராதேவி நாச்சியாருக்கும், குமரன் சேதுபதிக்கும் வாய்மொழியாக பாகம் பிரிவினை ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் அது எந்த ஆண்டு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. அதன்படி வடபுறம் குமரன் சேதுபதிக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் வழக்கறிஞரிடம்தான் கேட்கவேண்டும். அதன்அடிப்படையில் குமரன் சேதுபதி பெயரில் தனிப்பட்டா எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கூட்டுப்பட்டா உள்ளது. நான் சொல்வதுபோல் எந்தவிதமான பாகபிரிவினையும் ஏற்படவில்லை அதனால்தான் குமரன் சேதுபதிக்கு தனிப்பட்டா எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தாவா சொத்திலோ, அதற்கு வடபுறம் உள்ள சொத்திலோ குமரன்

சேதுபதிக்கு எந்தவிதமான பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. குமரன் சேதுபதி பெயரிலும், இந்திராதேவி நாச்சியார் பெயரிலும் பட்டா மாறுதல் ஏற்பட்டதாக சொல்லியுள்ளதில், பட்டா மாறுதல் உத்தரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பட்டா மாறுதல் உத்தரவு ஆகும். அது வா.சா.ஆ.15 ஆகும். அது 17.04.2012 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஆகும். அதில் மனுதாரர் ராஜா என்னும் குமரன்சேதுபதி என்று உள்ளது என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்படும்போது ராணி இந்திராதேவி நாச்சியார் அவர்கள் உயிரோடு இல்லை என்றால் சரிதான். அவர் இறந்து 14 ஆண்டுகள் கழித்து இந்த பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரிடத்திற்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கும்போது அதற்கு ஆதவராக என்ன என்ன ஆவணங்கள் குமரன்சேதுபதி கொடுத்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. இது சம்பந்தமாக தாசில்தார் ராணி இந்திராதேவி நாச்சியாரின் வாரிசுகளிடம் எந்தவித விசாரணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2012ம் ஆண்டு வரை தாவா சொத்துக்களான பட்டா டிரஸ்டி இராமநாத சேதுபதி மனைவி ராணி இந்திராதேவி நாச்சியார் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் பாரா 11ல் இந்த வாதி தனக்கு பாகத்திற்கு கிடைத்த சொத்தை 28.06.1999 தேதியிட்ட கிரைய ஆவணம்மூலமாக கிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் எங்கேயாவது இந்த சொத்து எனக்கும், எனது சகோதரர் குமரன் சேதுபதிக்கும் இடையே பாகத்தில் எனக்கு கிடைத்ததாக குறிபிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முன்னோர்கள் சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் நான்குமாலில் குமரன்சேதுபதி சொத்து என்று எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.